# ★ லண்டனில் இந்திய தூதரகம் முன் தமிழர் சத்தியாக்கிரகம்

05-7-1991

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆனி 21 | இதழ்: 144
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 5-7-1991

(லண்டன்)
இலங்கையின் வடக்கு-கிழக்குப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் அரசபடைகளின் அட்டூழியங்களை கண்டித்து அண்மையில் லண்டனிலுள்ள இந்திய தூதரகம் முன்

[4-ம் பக்கம் பார்க்க]

## ராணுவமையம் தகர்க்க தற்கொலைப்படை முயற்சி

[கொழும்பு]
கொழும்பு நகரின் பிரதான இராணுவ மையத்தில் மற்றுமொரு தற்கொலைப்படைஆள் குண்டுகளுடன் கூடிய வான்

(4ம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பழுகாமம் என்னும்

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் தமிழீழ மாநாட்டை குழப்ப சிங்கள சக்திகள் அச்சுறுத்தல்

## 5000பேரை பஸ்களில் அனுப்புவதாகவும் மிரட்டல்

(லண்டன்)
அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் 'தமிழீழ ஆய்வு மாநாட்டை' குழப்புவதற்கு அங்குள்ள சிங்களவர்கள் பலர் பயங்கரவாத முறைகளைக் கையாண்டு வருவதாக தெரியவந்துள்ளது. இதனை இலங்கை அரசும் ஊக்குவித்து வருகிறது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த மாநாடு எதிர்வரும் 19-ம் திகதி முதல் 21-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

இந்த மாநாட்டை ரத்துச் செய்யும்படி இலங்கை அரசும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தை வற்புறுத்தியிருக்கிறது. இதேவேளையில் இந்த மாநாட்டை நடத்தக்கூடாது என அச்சுறுத்தும் தோரணையில் அமெரிக்காவில் வசிக்கும் சிங்களவர் பலரிடமிருந்து தொலைபேசி அழைப்புகளும், கடிதங்களும் கலிபோர்னியா பல்கலைக்கழகத்துக்கு வந்த வண்ணமிருக்கின்றது.

[3-ம் பக்கம் பார்க்க]

## கேரள வானொலியில் வெடிகுண்டு மிரட்டல்

[திருவனந்தபுரம்]
கேரளத்தில் திருவனந்தபுரம் வானொலி நிலையத்திலிருந்து திரைப்படப்பாடல் நிகழ்ச்சிக்கு நடுவே வெடிகுண்டு மிரட்டல் செய்தியொன்று ஒலிபரப்பானதைக் கேட்டு வானொலி நேயர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அந்த ஒலிபரப்பில் இடம்பெற்ற மிரட்டலில் எர்ணாகுளத்தில்இரண்டு மாடிக்கட்டிடம் ஒன்றில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் 48 மணி நேரத்தில் அது வெடிக்கவுள்ளதாகவும் 20 கிலோ மீற்றர் தூரம் இதன் தாக்குதல் பாதிக்கப்படும் என்று மர்மஒலி ஒன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பின் சூத்திரதாரி தற்கொலை?

(கொழும்பு)
கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக கார் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி நடராஜா வரதன் [சிறீதரன்] நேற்றுமுன்தினமிரவு சயனைற் அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலவாக்கொல்லையிலுள்ள வீடு ஒன்றில் வரதனைக் கண்டுபிடித்த பொலிசார் இவரைக் கைது செய்யும்வேளையில் இவர் தற்கொலை செய்துகொண்டாராம்.

வரதனின் சடலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் வரதன் மறைந்திருந்த

[4ம் பக்சம் பார்க்க]

## 50 பொதுமக்கள் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் - வடக்கிலுள்ள தையிட்டிப் பகுதியில் 50 பொதுமக்கள் சிறீலங்கா ராணு

(4ம் பக்கம் பார்க்க)

## 6 சீன யுத்த விமானங்கள் இலங்கை வந்து சேர்ந்தன

(லண்டன்)
சீன அரசு இலங்கை விமான படைக்கு இரு 'எவ். ரி.-5ரக ஜெற் போர் விமானங்களையும் நான்கு 'எவ்-7'ரக யுத்த விமானங்களையும் அனுப்பி வைத்துள்ளது.

இத்தகவலைலண்டனிலிருந்து வெளிவரும் 'ஜோன்ஸ் பாதுகாப்பு சஞ்சிகை' தெரிவித்துள்ளது.

மேற்படி விமானங்கள் 1970ல்தயாரிக்கப்பட்ட சோவி

[4-ம் பக்கம் பார்க்க]

## விடுதலைப்புலிகள் வெளியேற்றப்படுவர்

[சென்னை]
தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களில் விடுதலைப்புலிகளை வேறுபடுத்தி அவர்கள் முதலில் நாடுகடத்தப்படுவர்.

இவ்வாறு கொச்சியில் செய்

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரிடம் சிக்கிய பெண்களின் நகைகள் பறிமுதல்

[யாழ்ப்பாணம்]
வலி. வடக்குப் பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்பின் போது சிக்குண்ட பெண்கள் அணிந்திருந்த நகைகள் படையினரால் பறித்தெடுக்கப்பட்டனவென்று அப்பகுதியில் இருந்து செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் மீண்டு வந்தவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது: மாவிட்டபுரம் பகுதியிலுள்ள

(4ம் பக்கம பார்க்க)

## பண்ருட்டி ராமச்சந்திரன் சட்டசபையில் தாக்கப்பட்டார்

[சென்னை]
தமிழக சட்டப் பேரவையில் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி இராமச்சந்திரன், சுயேட்சை உறுப்பினர் திரு. தாமரைக்கனியால் தாக்கப்பட்டார்.

ஆளுநர் பீஷ்மன் நாராயண் சிங் பேரவையில் உரையாற்ற முற்பட்டபோது திரு. இராமச்சந்திரன் ஒரு அறிக்கையை

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழக ஆளுநர் சரத் பவார் சந்திப்பு

(சென்னை)
இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு சரத்பவார் நேற்று தமிழக ஆளுநர் திரு பீஷ்மன் நாராயண் சிங்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்தும் தமிழ்நாட்டுக்குள் இலங்கைப் போராளி

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்திடம் சிக்குண்ட 22 பேர் விடுதலை!

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் சிக்குண்டிருந்தவர்களில் 22 பேர் நேற்றுக் காலை காங்கேசன் துறைமுகத்திலிருந்து சர்வ

[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமுள்ள அழகிய B. Sc. மணப்பெண்ணுக்கு 33 வயதுக் குட்பட்ட எஞ்சினியர், எக் கவுண்டன்ற், B. Sc. மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (சி 4946)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து 32 வயது கனடா சிற்றிசனுக்கும், 34 வயது ஜேர்மனி இந்து சிற்றிசனுக்கும், இங்கு அல்லது அங்குள்ள மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

(சி 4945)

## ''மீரா'' நாவல்கள்

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், விசேட தினங்களில் பரிசளிக்கக்கூடியவை. சிறுவர்களுக்கு ''இராவணன் கோட்டை'', இனவிடுதலையைமையமாக ''சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள்'', மற்றும் நெஞ்சைத் தொடும் பத்து சமூக நாவல்களும் விற்பனையாகின்றது.

(சி 4944)

## யந்திரம்

செவ்வாய் தோஷமுள்ளவர்களுக்கு ஆடி மாதத்தில் ஜெபிக்கவேண்டிய மங்கள சண்டி யந்திரம், விவாகத் தடையை நீக்கி இல்வாழ்வை தரும். சாதகத்துடன் யூலை 10ம் திகதிக்கு முன்வரவும். விவாகம் நடைபெறுவிட்டால்பணம் திரும்பபெற உத்தரவாதம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, (அரசடிச்சந்தி) நல்லூர்.

(சி-4928)

## பரீட்சை (ஆண்டு 4)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் ஆண்டு 4 மாதாந்தப்பரீட்சை (மூன்றுவது) 07-07-91 ஞாயிறு மு.ப. 8-00 / பி. ப. 1-00 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். பி. ப. 4-00 மக்கள் வைத்திய சாலை முன்பாக, கொக்குவில் மேற்கு நடைபெறும். பதிவு செய்யவும். புலமைப்பரிசில் மாதிரியில் 2ம் தவணைப்பாடத் திட்டத்திற்குள் நடைபெறும்.

(சி 4934)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

# அறிவித்தல்

வடபிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்கம்
**மாவீரர்கள் நினைவாக**
நடாத்தும்

## உதைபந்தாட்டப் போட்டி

ஏழு பேர் கொண்ட அணிக்கான போட்டி. இப் போட்டியில் பங்கு பற்றும் அணிகளில் தோல்வியடையும் அணி விலத்தப்படும். வெற்றி பெறும் 1-வது அணிக்கு மேஜர் சுருளியின் ஞாபகார்த்தமாக பரிசு வழங்கப்படும்.

2-வது அணிக்கு லெப்டினன்ட் சைமனின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். 3-வது அணிக்கு வீரவேங்கை மாவியின் ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். சிறந்த விளையாட்டு வீரனுக்கான பரிசு மாஸ்டர் செல்வராசாவின் (அன்பு) ஞாபகார்த்தமாகப் பரிசு வழங்கப்படும். சிறந்த பந்து காப்பாளருக்கான பரிசு லெப்டினன்ட் முகுந்தனின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும். வெற்றிபெறும் அணியின் வீரர்கட்கான பரிசுகள் முறையே:

1. கப்டன் பாரத்
2. 2-வது லெப்டினன்ட் காந்தி
3. கிறிஸ்ரி
4. பத்மப்பிரியா

**ஏனைய மாவீரர் நினைவாக**

போட்டி விண்ணப்ப முடிவு திகதி:-
**(இன்று) 05-07-91**

போட்டி விதிகள் விண்ணப்பம் பெற வருபவர்களுடன் ஒப்படைக்கப்படும்.

விண்ணப்பக் கட்டணம்:- 50/.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
செல்லையா உருத்திரா
தலைவர்
**வடபிராந்திய
சுருட்டுத் தொழிலாளர் சங்கம்**

(ஏ-1421)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1990/1991

இப் பல்கலைக்கழகத்தில் 1990/1991ம் கல்வியாண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கானவிபரங்கள் வருமாறு மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கைலாசபதி கலையரங்கில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமூகமளிக்கவும்.

1. பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்
4. போட்டோ பிரதிகள் 8(பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

**கட்டணங்கள்:**

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப் பீட மாணவர்களும், விஞ்ஞான, விவசாய, மருத்துவ பீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம்:
   மருத்துவம் ரூபா 20/-
   விஞ்ஞானம் ரூபா 30/-

**பயிற்சி நெறி**
கலை
**பதிவு செய்யும் திகதி:**
29 - 07 - 1991
**நேரம்**
காலை 9-00 — 4-00

**பயிற்சி நெறி:**
வர்த்தகம் / முகாமைத்துவம்
**பதிவு செய்யும் திகதி:**
30 - 07 - 1991
**நேரம்:**
காலை 9 - 00 — 4 - 00

**பயிற்சி நெறி:**
விஞ்ஞானம்
**பதிவு செய்யும் திகதி:**
31 - 07 - 1991
**நேரம்;**
காலை 9-00 — 4-00

**பயிற்சி நெறி:**
மருத்துவம்/விவசாயம்
**பதிவு செய்யும் திகதி:**
01 - 08 - 1991
**நேரம்:**
காலை 9- 00 — 4 - 00

மேற்கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

பதிவாளர்.
(ஏ-1422)

புங்குடுதீவு
அருள்மிகு அந்தோனியார் ஆலய
வருடாந்த

# உயர்திருவிழா



**இன்று 05-07-91 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 4-30 மணி
கொடியேற்றம்.**

ராகம்: கல்லாண வஸந்தம் தாளம்: ஆதி

பல்லவி
எந்தத் துணையுமில்லை என்றே துடிப்பவர்க்கு
அந்தோனியார் வருவார்
அருள் தருவார்.

அனுபல்லவி
வந்தேன் வந்தேன் அருள்
தந்தேன் கலங் காதீர் என
நொந்து வருந்தும் அடியார்
நலிவெல்லாம் தீர்த்திடுவார்.

சரணம்
கர்த்தரிடம் வேண்டிக்
கவலைகள் தீர்த்து வைப்பார்
பக்தி நிறை நெஞ்சகத்தார்
பரிசுத்த சிந்தையுள்ளார்
இத்தரையில் புங்கை யூரின்
கத்தும் கடல் அலை வருடச்
சித்தம் மகிழ்ந்தே கருணைச்
சமுத்திரமாயிருப்பார்.

— கவிமாமணி பிரம்மஸ்ரீ
ந. வீரமணி ஐயர்

(சி 4907)

13-ம் ஆண்டு

# நினைவஞ்சலி



★
தோற்றம்:-
02-11-1912
★
மறைவு:-
27-06-1978
★
திதி:-
05-07-1991
★

**அமரர் டாக்டர் சரவணமுத்து
சோமசுந்தரம்**
(முன்னைநாள் மானிப்பாய் அரசினர்
வைத்திய அதிகாரி)

எம்மையெல்லாம் அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் வாழ வளர்த்தெடுத்த
அன்புத் தந்தையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

டாக்டர் சோ. சுந்தரராஜன்,
''கிருஷ்ணு'',
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

இல: 2, செட்டித் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-4939)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை

# 769 இலக்க மினிபஸ்சேவை

**இன்று ஆரம்பம்!**

பொதுமக்களின் நன்மை கருதி 29/9235 இலக்க மினி பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழைக்கான தினசரி சேவையை
**05-07-1991 வெள்ளிக்கிழமை முதல்**
ஆரம்பித்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

(சி 4943)

# மாவீரர் தினத்தை யொட்டி கலை கலாச்சாரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் நவம்பர் 21—ம் திகதி முதல் 27-ம் திகதி வரை நடைபெறவிருக்கும் மாவீரர் தினத்தை யொட்டி, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் நடாத்தவிருக்கும் கலை கலாச்சார போட்டிகளில்எழுத்தாளர் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன. கட்டுரை, நாவல், சிறுகதை, கவிதை, சுவரொட்டி.

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகை காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுறோம்.

ஃ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

ஃ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளஇப்போட்டிகளில் ஆர்வம் ஆற்றல் மிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்.

போட்டிகளுக்கான விதி முறைகள்.

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய இப் போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாக கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும் அதேபோல் சுவரொட்டிகளின் கருப்பொருட்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப்படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்படல்வேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் ய வும் ஆட் போட்டில் 60 சென்றி மீற்றர் 40 சென்றி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்கு பற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடாசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மாணவர்களின் போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்.

மாணவர்களுக்கான போட்டிகள் சிறுகதை, கவிதை கட்டுரை, ஓவியம், ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். ஓவியங்கள் 18, 12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும்.

விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.

தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி

தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப்பணிகள்.

போராடுவதற்காகக் கற்போம்.

மேற்கண்ட தலைப்புக்களில் கட்டுரைகள் 2000 சொற்களுக்கு மேற்படாமல் வரையவேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேல் பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

15 வயதுக்கு உட்பட்டோர் கீழ் பிரிவு.

15 - 17 க்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு

17 க்கு மேற்பட்டோர் மேற் பிரிவு

ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசில்கள் வழங்கப்படும்.

## கொழும்பில் கைதுசெய்தவர்களை பொலிஸார் தாக்கினர்

(கொழும்பு)

''குண்டு வெடிப்பு சம்பந்தமாகத் தேடப்படும் இளைஞர்களை கைது செய்வதற்காக 'ஸ்ரீதர் லொட்ஜுக்கு' வந்த, இராணுவத்தினர் எங்கள் அனைவரையும் கைது செய்து வாகனத்தில் ஏற்றி கோட்டை பொலிஸ்நிலையத்தில் காவலில் வைத்தனர்''.

இவ்வாறு விடுதலையாகி யாழ்ப்பாணம் வந்த இளைஞர் ஒருவர் தெரிவித்தார். அந்த லொட்ஜில் சுமார் 160 பேர் தங்கியிருந்தோம்: வரதன் இங்கேதான் தங்கியிருக்கிறார் என தகவல் கிடைத்துள்ளது என எங்களை பொலிஸ்நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர். எங்களில் பலர் பொலிஸ் நிலையத்தில் தாக்கப்பட்டோம்.

இந்த லொட்ச்ஜின்சொந்தக்காரர்கள் பொலிசாருடன் தொடர்பு கொண்டு எங்கள் விபரங்களைத் தெரிவித்தபின்னர் எங்களை விசாரணைசெய்து விட்டு விடுதலை செய்தனரென்றும் கூறினர். (எஸ்)

## காரைநகரில் இராணுவ் நடவடிக்கை: மீனவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கரைநகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக பல நூற்றுக் கணக்கான மீனவர்கள் தொழிலின்றி கஸ்டப்படுகின்றனர்.

காரைநகரைச்சுற்றியுள்ள பகுதிகளான பொன்னாலை, வலந்தலை' நெல்லியானி, சுழிபுரம், திருவடிநிலை ஆகிய இடங்களில் வசித்துவந்த மீனவக் குடும்பங்களே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிக் கடலில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் கடுமையாக இருப்பதனால் மீனவர் மீன் பிடிக்கச் செல்வதில்லை.

இதன் காரணமாகவே இவர்கள் கூடுதலாகர பாதிக்கப் பட்டுள்ளனர். (66)

## இராசி பலன்

05- 07- 1991

வெள்ளிக்கிழமை

அட்டமி பகல் 3-30 வரை, ரேவதி நள்ளிரவு 12-08 வரை.

அமிர்தயோகம், இராகு காலம் நண்பகல் 1-27 முதல் 2-27 வரை; சுபநேரம் காலை 7-27 முதல் 8-07 வரை.

மேடம்: உறவினர் பகை. தொழில் குழப்பம், மனச் சுமை.

இடபம்; குழந்தை உள்ளம், மகிழ்ச்சி பிரவாகம், உல்லாசம்

மிதுனம்: தொழில் சிறப்பு, அறிஞர் சந்திப்பு, குடும்ப சுகம்.

கடகம்: குடும்பச் சச்சரவு, அந்நியவாசம், கவலைமிகுதி,

சிங்கம்: பணியாள் துன்பம், நெஞ்சுவலி, தொழில் பாதிப்பு

கன்னி: மனத்துணிவு குடும்பசுகம், செல்வாக்கு.

துலாம்: சுற்றுலா, புத்திரர் பெருமை, பணவரவு.

விருச்சிகம்; நோய்வாட்டும், குடும்பமோதல், அலைச்சல்.

தனுசு. மனதில் பயம், இல்லச்சிறப்பு, காரியதாமதம்.

மகரம்: சகோதர உதவி, புதியதிட்டம், வாக்குவன்மை.

கும்பம்: அதிகாரிகள் சினம், குறைகேட்டல், வெறுப்பு,

மீனம்; எதிர்பாராத உதவி, தொழில் மாற்றம், தானமர்மம்.

-ஜோஸ்யர்-

## அமெரிக்காவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கருத்தரங்கில் இலங்கை சம்பந்தமான முக்கிய விடயங்களும், மற்றும் இலங்கையின் வடக்குகிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கெதிராக விளைவிக்கப்படும் மனிதஉரிமை மீறல் செயல்களும் அம்பலத்துக்குக் கொண்டுவரப்படுமென்ற அச்சத்தின் காரணமாக இந்தக் கருத்தரங்கை ரத்துச்செய்யுமாறு இலங்கை அரசும் வற்புறுத்தியிருக்கிறது.

இலங்கை அரசின் முதல் வற்புறுத்தல் ஒரு தொலைபேசி அழைப்பு மூலமாக வந்தது. தொலைபேசியில் பேசியவர் தம்மை அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் என அறிமுகம் செய்துகொண்டார்.

ஆனால் பல்கலைக்கழக அதிகாரிகள் கருத்தரங்கை ரத்துச் செய்வதற்கான அவரது வற்புறுத்தலை ஏற்க மறுத்துவிட்டனர்.

ஆனால் அங்கு கருத்தரங்கை எதிர்த்த சிங்களவர்களை இது செயலற்றதாக்கி விடவில்லை. பல்கலைக்கழகத்துக்குத் தொடர்ந்து தொலைபேசி அச்சுறுத்தல்கள் வந்துகொண்டிருந்தன.

இந்தக் கருத்தரங்கைக்குழப்புவதற்கு எதையும் செய்யப் போவதாக திரு. வோல்டர் ஜெயவர்த்தன என்பவர் பல தொலைபேசி மிரட்டல்களை விடுத்தார்,

சுமார் ஐயாயிரம் எதிர்ப்பாளர்களை பஸ்கள் மூலம் கொண்டுவரப்போவதாக திரு திலக் மீரிஸ் என்ற மற்றொருவர் அச்சுறுத்தல் விடுத்தார்.

பல்கலைக்கழகத்தலைவருக்கும், ஆளுநருக்கும் அமெரிக்காவிலுள்ள சிங்களவர் பலர் எதிர்ப்புக் கடிதங்களையும் அச்சுறுத்தல் கடிதங்களையும் அனுப்பிவைத்தனர்.

இலங்கையில் அரசு ஆதரவுடன் நடைபெறும் பயங்கரவாதச் செயலைப்போல் இது இருக்கிறது. சிறுபான்மை இனத்தவர்களின் கருத்துச் சுதந்திரம் இலங்கையில் பறிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. ஆனால் வெளிநாடுகளிலும் இதனைப் பாதிப்பதற்கு இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதை இது தெளிவாக்குகிறது என இக் கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்கள் விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளனர்.

## தியாகி திலீபன் ஞாபகார்த்த விளையாட்டு விழாவின் தகைமைகளும் நிபந்தனைகளும்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படும் தியாகி திலீபனின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான தடகள விளையாட்டு விழாவின் வட்டவை மட்டத்திலான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 10ம் திகதியாகும்.

வட்டவை மட்டத்திலான போட்டியாளர்கள் கொண்டிருக்க வேண்டியதகைமைகளும் நிபந்தனைகளும்:

வட்டவைக்குள் வசிக்கும் வதிவிடதாரர்கள் அவ்வவ் வட்டவையை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்த முடியும்,

ஒருவர் ஒரு வட்டவையை மாத்திரமே பிரதிநிதித்துவப் படுத்தமுடியும்.

வெளிமா வட்டத்தவர்கள் எனின் தாங்கள் தற்போது வகித்துவரும் தற்காலிக வதிவிட வட்டவையை பிரதிநிதித்துவப் படுத்தல் வேண்டும்.

போராளிகள், தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்தோர், உத்தியோகத்தர்கள், கல்வியின்பொருட்டு நிர்வாகமாவட்டத்தில் வசிப்போர் தாங்கள் விரும்பிய ஏதேனும் ஓர் வட்டவையைப் பிரதிநிதித்துவப் படுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது. இருப்பினும் ஒரு வட்டவையை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்தலாம்.

வட்டவைமட்டப் போட்டிகளிலும் சரி போட்டியாளர்கள் போட்டிக்கு உகந்த உடையணிந்து வருதல் அவசியமாகக் கருதப்படுகிறது. விண்ணப்பப் படிவம் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

நடாத்தப்படவுள்ள நிகழ்ச்சிகளின் விபரம்:

வட்டவை மட்டத்தில் ஆண்களுக்கானது:

100 மீற், 200 மீற், 400 மீற், 800 மீற், 1500 மீற், 5.000 மீற், 10,000 மீற். உயரம் பாய்தல், நீளம் பாய்தல், தத்தி மிதித்துப்பாய்தல், குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல், வேகநடை.

வட்டவை மட்டத்தில் பெண்களுக்கானது:

100 மீற், 200 மீற். 400 மீற், 800 மீற், 1,500 மீற், 3,000 மீற். 10,000 மீற், உயரம் பாய்தல், நீளம் பாய்தல். தத்திமிதித்து பாய்தல் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல், வேகநடை.

மாவட்ட மட்டத்தில் ஆண்களுக்கானது;

4 x 100 மீற் அஞ்சலோட்டம்.

4 x 400 மீற் அஞ்சலோட்டம்.

மரதன் ஓட்டம்.

சைக்கிள் ஓட்டம்.

மாவட்டமட்டத்தில் பெண்களுக்கானது;

4 x 100 மீற் அஞ்சலோட்டம்;

4 x 400 மீற் அஞ்சலோட்டம்.

மரதன் ஓட்டம்.

சைக்கிள் ஓட்டம்:

விளையாட்டுக்களின் பாரம்பரியம் பேணப்பட்டு, எமது பிரதேச விளையாட்டுத்தரம் உயர்த்தப்படுதலோடு மக்களின் உடல்நலம் பேணப்படும் வகையில் போட்டிகளில் பங்கு கொண்டு எம்முடன் ஒத்துழைக்குமாறு விடுதலைப் புலிகள்ம.மு. கேட்கப்டுள்ளது.

## இன்று இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பார்வதி சமேத பரமேஸ்வரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு செல்வி சாரதா சச்சிதானந்தத்தின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (க)

## "தரமான இறைச்சியை விற்பனைசெய்வதால்சுகாதார சீர்கேடுகளைத் தவிர்க்கலாம்"

[யாழ்ப்பாணம்]

''சுகாதார முறைப்படி யாழ்.மாநகரசபை இறைச்சிக் கடை உரிமையாளர்கள், பொதுமக்களுக்கு தரமான இறைச்சிகளை தற்போது விற்பனை செய்து வருகின்றார்கள்.'

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வி. ஜே. பாலசிங்கம் யாழ். மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

ஆணையாளர் மேலும் கூறியதாவது தரமான இறைச்சிகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதால் சுகாதார சீர்கேடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும். யாழ். மாநகர சபை இறைச்சிக்கடை உரிமையாளர்களை பின்பற்றி உள்ளூர் பிரதேச சபையின் கீழ்இயங்கி வரும் மற்றைய இறைச்சிக் கடை உரிமையாளர்களும் நடந்து கொள்வது நல்லது.''

உணவு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி பேசுகையில் இறைச்சிக்கடை உரிமையாளர் பல இடங்களில் தமது விருப்பத்துக்கு ஏற்ற விலையில் இறைச்சியைவிற்பனை செய்து வருகின்றார்கள் என்றும் இந்தநிலை மாறி ஒரு கட்டுப்பாடான விலையில் வியாபாரிகள் இறைச்சியை பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டும்'' என்றும் கூறினர்.

செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் நன்றி தெரிவித்தார். (வி)

## சென். நீக்கிலஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் ''அமரர் குமரையா'' வெற்றிக்கிண்ணத்துக்காக நேற்று ஆரம்பமான முதலாவதுபோட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகம் யாழ். பல்கலைக்கழகத்தை 1-0 கோலால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எம். பிரான்ஸிஸ் மத்தியஸ்தம் வகித்தார். (வி)

★ இலங்கையில் இன்னலுறும்

# தமிழர் துன்பங்கள் குறித்து

## சுவீடன் அரசு கவலை

[யாழ்ப்பாணம்]

இலங்கையின் வடக்கு-கிழக்கு நிலைமைகள் குறித்து சுவீடன் ஆழ்ந்த கவலைகொண்டுள்ளது. இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் சுவீடன் அரசு பேச்சுவார்த்தை மேற்கொண்ட பல சந்தர்ப்பங்களிலும் இதுவிடயம் குறித்து இலங்கை அரசின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது.

சுவீடிஷ் பிரதமரின் உதவிச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வலிகாமம் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிறீபாஸ்கரன் எழுதிய கடிதம் ஒன்றுக்கான பதிலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் நிலவிவரும் மோசமான நிலைகுறித்து சுவீடன் நீண்டகாலமாக கவலை கொண்டுள்ளது. தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவரும் துயரங்கள் குறித்தும் நாம் மிகவும் சஞ்சலமடைந்துள்ளோம்.

இனப்பிரச்சனைக்கு அமைதியான ஒரு தீர்வு ஏற்பட பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டியது அவசியமென சுவீடன் கருதுகிறது.

இலங்கையின் நிலைமைகளை சுவீடன் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்துவரும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### இராணுவத்தின

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெரும்பாலான வீடுகள் ராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய வீடுகளிலிருந்த பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. இப்பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்குண்ட பெண்கள் அணிந்திருந்த தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, தோடு, மோதிரம் அனைத்தும் இராணுவத்தால் பறித்தெடுக்கப்பட்டன.

தையிட்டி ஆவளைச் சந்தியில் தற்போது பெரிய இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சிக்குண்டவர்களில் பலர் அடிக்கடி இராணுவத்தால் தாக்கப்பட்டனர். குளிப்பதற்கோ அன்றி மலசலம் கழிக்கச் செல்வதாகவோவிருந்தால் இராணுவத்தினரின் துணையோடுதான் செல்ல வேண்டும்.

வீடுகளில் சிக்கி இருந்தவர்கள் இராணுவத்தினரால் அடிக்கடி சோதனை செய்யப்பட்டுவருகிறார்கள்.

இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட வலி வடக்குப் பகுதியில் படையினருக்கு உதவியாக புளொட், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

அக்டோபர் 20ம்திகதி வலி. வடக்குப் பகுதி இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட போது வயோதிபர் ஒருவர் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். (153)

### ராணுவத்திடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேச செஞ்சிலுவைச் சங்க குழுவால் கப்பல்மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டு நேற்று மாலை 5-30 மணியளவில் யாழ். றக்கா வீதியிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

விடுவிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு: கதிரமலை கதிரவேலு(17வயது மாவிட்டபுரம். தையிட்டியைச் சேர்ந்த வேலாயுதம் பராசக்தி (43 வயது), வேலாயுதம் சரநேசன் (6 வயது), வேலாயுதம் நரேந்திரன் (2 1/2 வயது) [இவர்கள் இருவரும் பராசக்தியின் பிள்ளைகளாவர்], கா. வள்ளியம்மை (68 வயது), கே காசிப்பிள்ளை (95வயது), காசிப்பிள்ளை பாக்கியம் (70 வயது), ஆசைப்பிள்ளை சிதம்பரம் 80 வயது!, கா. தங்கப்பிள்ளை(54 வயது), தா. அன்னமுத்து [54 வயது], செ. தம்பிராசா (58 வயது), தி இரத்தினம் (73 வயது)- வறுத்தலைவிளான், முருகுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை (60 வயது) -பயிலிட்டி, எஸ். லோகேஸ்வரன் (21 வயது)-காங்கேசன்துறை, கதிரமலை பரமேஸ்வரி (55 வயது) - மாவிட்டபுரம், கந்தையா நடராசா(70வயது) குருவீதி, காங்கேசன்துறை, சி இராசலிங்கம் [60 வயது) தையிட்டி, கே. அருளம்பலம் (70 வயது) தையிட்டி, செல்வி சின்னையா சாந்தலட்சுமி (31 வயது) தையிட்டி. சி. சுந்தரி (40-வயது) மயிலிட்டி, கணபதிப்பிள்ளை பாக்கியம் (53-வயது) தையிட்டி, அருளம்பலம் நாகம்மா [56-வயது] தையிட்டி. (153)

### குண்டுவெடிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தை இவரது பெண் சிநேகிதி பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரிவித்ததையடுத்தே இவர் கைது செய்யப்பட்டாராம். அமைச்சர் ரஞ்சனின் கொலைக்கும் இவரே காரணமென்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். [பூ]

### 50 பொதுமக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வத்திடம் சிக்குண்டு கடந்த 8மாதங்களாக அவர்கள் வீடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (153)

### கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க வலிகாமப்பிரிவு தொடர்பாளர்கள் கிராமியத் தொடர்பாளர்கள் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் 5-7-91 அன்று மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் 4.30 மணிக்கு நடைபெறும்.

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்கக்கூட்டம் சில முக்கிய விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 6-7-81 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பட்டப்படிப்புகள் கல்லூரி ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களும் தவறாது சமுகமளிப்பபதுடன் நேர்முகப்பரீட்சைக்கு அனுமதிக்கடிதம் கிடைத்தவர்கள் அனுமதிக் கடிதத்துடன் வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

### லண்டனில்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

மாபெரும் 'சத்தியாக்கிரக' எதிர்ப்பு நடைபெற்றது.

சர்வதேச தமிழர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த சத்தியாக்கிரகம் நடைபெற்றது. இதில் லண்டனிலுள்ள தமிழர் உட்பட பல நாட்டைச்சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர்.

காலை இந்திய தூதரகம் முன் ஆரம்பமான இந்த சத்தியாக்கிரகம்மாலைவரை இடம்பெற்றது. முடிவில் இந்திய தூதரிடம் நீண்ட மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது இந்த மகஜரில், வடக்கு-கிழக்கில் நடைபெறும் அட்டூழியங்களை இந்திய அரசும், இந்திய மக்களும் கண்டித்து இதனை தடுத்து நிறுத்த ஆவனசெய்ய வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மகஜரை ஏற்றுக் கொண்ட இந்தியதூதர் இதனை தாம் புதுடில்லிக்கு அனுப்புவதாகவும் உறுதியளித்தாராம். (சி)


## கார் விற்பனைக்கு

மொறிஸ் மைனர் 2 ஸ்ரீ 2815 உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

3/6, கேசவப்பிள்ளையார் கோவில் வீதி

(நாச்சிமார் கோவிலடி)

யாழ்ப்பாணம்,

(சி- 4948)



## கலந்துரையாடல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைப்படைப் பயிற்சி பெற்ற அனைவருக்குமான கலந்துரையாடல்

இடம்: யா/இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்: 05-07-1991 வெள்ளிக்கிழமை

நேரம்: மாலை 4.00 மணி

துணைப்படைப் பயிற்சி பெற்ற அனைவரும் தவறாது இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

- தமிழீழ விடுதலைப் புலிகள்

[எ1423]



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81


# தமிழ் இளைஞர் எய்ட்ஸுக்கு பலி

(கொழும்பு)

கனடாவிலிருந்து நாடுதிரும்பிய இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் 'எயிட்ஸி'னால் கொழும்பில் பலியானார்.

கனடாவிலிருந்து இவர் நோயின் தாக்கம் அதிகரித்த நிலையிலேயே நாடு திரும்பியதாகவும் பின் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது பெயர் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (சி)

### வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவத்தினருடன் 1ம் திகதி நடைபெற்ற நேரடி மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிரிந்த பிரசாத் (பாலிப்பொடி மகேந்திரன், வில்லூட்டி, சித்தாண்டி மட்டக்களப்பு] 4ம் திகதி வீரமரணமடைந்தார். இவருக்கு புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### கைது

[கொழும்பு]

மலையக முன்னணி தமிழ் அரசியல்வாதிகள் சிலர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்புக்கு காரணமாக வரதன் என்பவருக்கு இவர்கள் புகலிடம் அளித்ததாக குற்றம் சாட்டியே இவர்கள் கைதுசெய்யப்பட்டார்களாம். [சி]

### தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஊடுருவல்களைத் தடுப்பது குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### விலகினார்

(மாஸ்கோ)

சோவியத் முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. எட்வார்ட் செவர்னட்ஷே கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகியுள்ளார்.

மத்திய சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளருக்குத் தம் நிலைகுறித்துக் கடிதம் எழுதியுள்ளதாக அவரது நண்பர் கூறியதாக, சோவியத் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (பூ)

### 6 சீன யுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யத் விமானங்களான 'மிக்-15' 'மிக்-17' ரக போர் விமானங்களை ஒத்த விமானங்களாகும். இதனை சீனா தயாரித்துள்ளது.

### மூன்று தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

கடந்த 1-ம் திகதி மட்டு பெரியபோரதீவில்நிலை கொண்டிருந்த இராணுவத்தினரால் பழுகாமம் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

இச்சுற்றிவளைப்பின் போது 20 தமிழர்கள் கைது செய்யப்பட்டு 5 பேர் மேல் விசாரணைகளுக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் கடுமையானசித்திரவதையின் பின் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மு. நவநீதன் (வயது 19), வ. யோகேஸ்வரன் (வயது 19) சீ வெள்ளத்துரை வயது18ஆகியோரேஇச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவார்கள்.

### ராணுவமையம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வண்டியை ஓட்டிச்சென்று கட்டிடத்தைத் தகர்க்கமுற்பட்டதாக நேற்றிரவு பி. பி, ஸி. தெரிவித்தது.

இத்தாக்குதலுக்கான முயற்சி கொழும்பில் எந்தப் பகுதியில் இடம்பெற்றது என்ற தகவலெதுவும் வெளியிடப்படவில்லை. மேலும் கொழும்பில் தற்கொலைப்படைத் தாக்குதல் குறித்துச் சகல பகுதிகளிலும் கடும் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுமுள்ளன. [சி]

### கேரள

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அங்கு ஒலிபரப்பாகியது. தாம் விடுதலைப்புலிகள் என்றும் அக்குரல் கூறியது.

இதுகேட்ட மக்கள் உடன் பொலிசாருக்கு அறிவித்தனர். ராஜீவ்காந்தியின் கொலையையடுத்து பீதியில் இருக்கும் மக்களை இன்னும்பீதியில் இருக்கச் செய்யும் சதிச்செயல் இது என பொலிஸ் அதிகாரிகள் கூறினார்கள். (பூ)

### பண்ருட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாசிக்க முற்பட்டார். இதனை திரு. தாமரைக்கனி வாசிக்கவிடாதுதடுத்தார். அ.தி.மு.க. உறுப்பினர்களும் அறிக்கை வாசிப்பதை எதிர்த்தனர்.

இச் சர்ச்சைக்கிடையில் திரு. தாமரைக்கனி எழுந்து வந்து திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் முதுகில் ஒரு அடி போட்டுவிட்டு தன் ஆசனத்துக்கு சென்று அமர்ந்தார்.

இச் செயலைக்கண்டித்து திரு. இராமச்சந்திரனும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தனர். (பூ)

### விடுதலைப்புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியாளர் மத்தியில் பேசிய மத்திய உள்துறை இணையமைச்சர் எம். எம். ஜேக்கப் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்யும் சகலருக்கும் எதிராக மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்றார். [பூ]


## ஆண் தாதிகள் தேவை

தனியார் வைத்திய நிறுவன மொன்றில் கடமை புரிவதற்கு ஆண் தாதிகள் தேவைப்படுகின்றார்கள். தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். தகுந்த ஊதியம் வழங்கப்படும். பயிற்சிபெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கவும்:

விளம்பர இல. எ-1424

மே/பா ஈழநாடு,

யாழ்ப்பாணம்.

[எ-1424]